**( Common for Both Pupil and Private candidates )**

| Register Number | | | | | | |
|---|---|---|---|---|---|---|

# தமிழ் - இரண்டாம் தாள்

# Language – Part A – TAMIL – Paper II

( New / Old Syllabus )

நேரம் : $2\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு :* i) கையெழுத்து தெளிவாக இருத்தல் வேண்டும்.

ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.

iii) கட்டுரைகள் முன்னுரை, பொருளுரை மற்றும் முடிவுரைகளைக் கொண்டு இருத்தல் வேண்டும்.

I. எவையேனும் **ஐந்தனுக்கு** மட்டும் விடை தருக : $5 \times 1 = 5$

1. கனிமொழி கட்டுரை எழுதினாள்.

   செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றுக.

2. வானத்து விண்மீன்கள் மிக அழகாக உள்ளன.

   உணர்ச்சி வாக்கியமாக மாற்றுக.

3. தமிழின் இனிமையை அனைவரும் அறிவர்.

   வினா வாக்கியமாக மாற்றுக.

4. உழவர் நிலத்தை உழுதார்.

   வினா வாக்கியமாக மாற்றுக.

5. ஆசிரியர்களுக்கு என்றும் செல்வாக்கு உண்டு.

   பொருள் மாறாமல் எதிர்மறை வாக்கியமாக மாற்றுக.

[ Turn over

6. மணி அயராது உழைத்தான்; அதனால் வாழ்வில் முன்னேறினான்.

கலவை வாக்கியமாக மாற்றுக.

7. நாளை, தான் மதுரை செல்வதாக நன்மாறன் கூறினான்.

நேர்க்கூற்று வாக்கியமாக மாற்றுக.

II. கீழ்க்காணும் வினாக்கள் அனைத்திற்கும் விடையளி : 5 × 1 = 5

8. அ) சிறந்தோங்க

ஆ) பசுமரத்தாணி போல்

இ) வாழையடி வாழையாய்

- ஏதேனும் ஒன்றினுக்கு மட்டும் பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

9. வழூஉச் சொற்களைத் திருத்தி எழுதுக :

வலதுபக்கம் சுவற்றில் வரைந்திருக்கும் படத்தைப் பார்.

10. மரபு பிழை நீக்கி எழுதுக :

காக்கை கத்த, நரி உறுமும்.

11. பிறமொழிச் சொற்களை நீக்கி ஏற்ற தமிழ்ச் சொற்களை எழுதுக :

ஹாஸ்டலில் சேர நண்பர் சிபாரிசு செய்தார்.

12. ஏற்ற இடங்களில் நிறுத்தற் குறிகளை இடுக :

தாயைப்போல பிள்ளை நூலைப்போலச் சேலை என்ற பழமொழி வீணாகுமா

III. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக : 3 × 2 = 6

13. பகுபத உறுப்பிலக்கணம் தருக. ( **ஒன்றனுக்கு** மட்டும் )

அ) வாழ்க ஆ) காத்த

14. பிரித்தெழுதுக :

அ) நெடுந்தேர் ஆ) மண்ணுலகின்.

15. இன்றியமையாத இலக்கணக் குறிப்பு தருக : ( **இரண்டனுக்கு** மட்டும் )

அ) மாநெறி

ஆ) வெண்குடை

இ) காய்சினம்.

IV. கீழ்க்காணும் வினாக்களுக்குரிய விடையைத் தெரிந்து எழுதுக : 20 × 1 = 20

16. அரை மாத்திரை அளவு பெறும் எழுத்து

அ) உயிர்மெய் ஆ) உயிர்க்குறில்

இ) உயிர்நெடில் ஈ) மெய்யெழுத்து.

17. தனி மொழிக்கு எடுத்துக்காட்டு

அ) சாலச் சிறந்தது ஆ) எட்டு

இ) மனிதன் ஈ) தாமரை.

18. "இப்பாடற் பொருள் யாது ?" என ஆசிரியர் கேட்பது

அ) அறியா வினா ஆ) ஐய வினா

இ) அறி வினா ஈ) ஏவல் வினா.

19. வெள்ளத்தனைய என்பது ........................ எனப் பிரியும்.

அ) வெள்ளம் + அனைய ஆ) வெள்ளத்து + அனைய

இ) வெள்ள + தனைய ஈ) வெள்ளத் + அனைய.

20. ஆறு பெரும் பொழுதுகளும் பெறும் திணைகள்

அ) குறிஞ்சி, பாலை ஆ) மருதம், நெய்தல்

இ) முல்லை, பாலை ஈ) நெய்தல், முல்லை.

21. ஆநிரைகளை மீட்கச் செல்வது

அ) உழிஞைத் திணை ஆ) கரந்தைத் திணை

இ) நொச்சித் திணை ஈ) வஞ்சித் திணை.

22. செப்பலோசை பெற்று வருவது

அ) வஞ்சிப்பா ஆ) ஆசிரியப்பா

இ) கலிப்பா ஈ) வெண்பா.

23. ஆசிரியப்பா

அ) ஆறு வகைப்படும் ஆ) எட்டு வகைப்படும்

இ) நான்கு வகைப்படும் ஈ) ஐந்து வகைப்படும்.

24. கோப்பெருந்தேவி வந்தது

அ) பால் வழு ஆ) திணை வழு

இ) கால வழு ஈ) இட வழு.

25. குறைந்து ஒலிக்கும் உகரம் ........................ .

26. எழுத்து தனித்து நின்றோ பல எழுத்துகள் தொடர்ந்து நின்றோ பொருள் தருவது ........................ எனப்படும்.

27. தெரிநிலை வினைமுற்று ........................ தெளிவாகக் காட்டும்.

28. பருப்புளதோ ? வணிகரே என வினவுவது ........................ வினா ஆகும்.

29. வயலும் வயல் சார்ந்த இடமும் ........................ நிலமாகும்.

30. செய்யுளில் உவம உருபு மறைந்து வருவது ........................ அணியாகும்.

31. பொருத்துக :

அ) தெரிநிலை வினைமுற்று — செய்வாய்

ஆ) ஏவல் வினைமுற்று — பொன்னன்

— தொடுத்தாள்.

32. பொருத்துக :

அ) நிரை கவர்தல் — உழிஞை

ஆ) செரு வென்றது — வெட்சி

— வாகை.

33. காய் முன் நேர் வருவது ........................ ஆகும்.

அ) கலித்தளை

ஆ) ஒன்றிய வஞ்சித்தளை

இ) வெண்சீர் வெண்டளை.

34. காலை வலிக்கின்றது என்பது ........................ .

அ) இனமொழி விடை

ஆ) உற்றது உரைத்தல்

இ) உறுவது கூறல்.

35. மீமிசை ஞாயிறு

அ) இரட்டைக் கிளவி

ஆ) ஒருபொருட் பன்மொழி

இ) அடுக்குத் தொடர்.

V. அ) கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஆறனுக்கு** மட்டும் விடையளி :

**6 × 2 = 12**

36. தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

37. இன்னிசை அளபெடையைச் சான்றுடன் விளக்குக.

38. மொழி எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

39. உடன்பாட்டு வினைமுற்று, எதிர்மறை வினைமுற்று விளக்குக.

40. இறந்தகால வினையெச்ச வாய்பாடுகள் யாவை ?

41. வழுவமைதி என்றால் என்ன ?

42. அறிவினா என்றால் என்ன ? அதன் நோக்கங்களைச் சுட்டுக.

43. ஐய வினாவை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

ஆ) கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஆறனுக்கு** மட்டும் விடையளி :

**6 × 2 = 12**

44. வடகிழக்கு - பிரித்துக் காட்டிப் புணர்ச்சி விதி கூறுக.

45. பெரும்பொழுது எத்தனை ? அவை யாவை ?

46. பொதுவியல் திணையை விளக்குக.

47. பா எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

48. "சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று."
- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

49. தற்குறிப்பேற்ற அணி அல்லது சொற்பொருள் பின்வருநிலையணியை விளக்குக.

50. கீழ்க்காணும் குறட்பாவை அலகிட்டு வாய்பாடு கூறுக :
ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்.

[ Turn over

VI. 51. கீழ்க்காணும் பாடலைப் படித்துப் பொருள் உணர்ந்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக : $5 \times 2 = 10$

மருத்துவத்தைப் பொறியியலைத் தமிழில் கற்று
மக்கள்நலம் காப்பாற்ற விரும்பு கின்ற
கருத்துடைய மாணவர்கள் தோன்ற வேண்டும்!
கடும் உழைப்பால் தமிழர் புகழ் ஓங்க வேண்டும்!
வருங்காலத் தமிழரெல்லாம் அறிவால் இந்த
வையத்தை வியப்படையச் செய்ய வேண்டும்!
இருண்டிருக்கும் நிலைமாறத் தமிழில் கற்போம்!
என்றென்றும் தலைநிமிர்ந்து வாழ்வோம்! வெல்வோம்!

*வினாக்கள்:*

i) எத்தகைய மாணவர்கள் தோன்ற வேண்டும் ?

ii) தமிழர் புகழ் எதனால் ஓங்க வேண்டும் ?

iii) வையத்தை வியப்படையச் செய்யும் வழி யாது ?

iv) என்றென்றும் தலைநிமிர்ந்து வாழும் வழி என்ன ?

v) இப்பாடலில் அமைந்துள்ள இரு எதுகைச் சொற்களை எழுதுக.

VII. 52. நும் ஊரில் நூலகம் அமைத்திட வேண்டி நூலக ஆணையருக்கு விண்ணப்பம் வரைக. $1 \times 10 = 10$

*அல்லது*

நீ சென்று வந்த சுற்றுலா குறித்து உன் நண்பனுக்கு ஒரு கடிதம் வரைக.

VIII. 53. கீழ்க்காணும் தலைப்புகளுள் **ஒன்று** குறித்து ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் கட்டுரை வரைக : $1 \times 10 = 10$

அ) காலத்தை வெல்லும் கணினி

ஆ) தீ விபத்தின் விளைவுகளும் தடுப்பு முறைகளும்

இ) சிக்கனமும் சேமிப்பும்.

IX. 54. கீழ்க்காணும் தலைப்புகளுள் **ஒன்றனுக்கு** மட்டும் ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் கட்டுரை வரைக : $1 \times 10 = 10$

அ) சபேசன் காப்பியின் வளர்ச்சி இரகசியம்

ஆ) 'பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு' என்ற பழமொழியைக் 'காய்ச்ச மரம்' என்ற கதை கொண்டு விளக்குக.

இ) அப்பாவு கணக்கில் 35 ரூபாய்

ஈ) பட்டாளத்தார் மகனின் பண்புகள்.